1977 ஆகஸ்ட் 6]

நீங்கள் எனது பார்வைக்குக் கொண்டு வருவீர்களேயானால் நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கனம் உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மனு நீதித் திட்டம்.

*24 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மனு நீதித் திட்டம் தற்போது அமுல் நடத்தப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, அமுல் படுத்தப் படுகிற திட்டம் தமிழகத்தில் ஆரம்பத்தில் துவக்கப்பட்ட போது இங்கு அது சிறப்பாக நடைபெறுகிறது என்று மற்ற மாநிலங்களில் எல்லாம் பாராட்டுக்கள் தெரிவித்தார்கள். இடைக்காலத்தில் நெருக்கடி நிலை இருந்த பொழுது அந்தத் திட்டம் செயல்படுத்தப் படவில்லை என்று அறியப்படுகிறது. எனவே, நமது புதிய அரசு புதிய முறுக்கோடு அந்தத் திட்டத்தை செயல்படுத்த ஆவன செய்ய முன் வருமா?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இந்தத் திட்டம் அமலில் இருக்கிறது என்று நான் சொன்னேன். ஆனால் இந்தத் திட்டத்தைப் பற்றி சில தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அது சரியாக இயங்கவில்லை என்ற ஒரு கருத்தும், முறையாக அது செயல்படுத்தப்படவில்லை என்ற கருத்தும் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் ஆய்ந்து பார்த்து எப்படி நடவடிக்கைகள் எடுப்பது என்பது பற்றி அரசு ஆவன செய்யும் என்பதை கனம் உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது இந்த மனு நீதித் திட்டம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். உண்மைதான். 1967 ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகப் போடுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : எல்லாக் கேள்விகளையும் சுருக்கமாகக் கேட்க முடியாது, மன்னிக்கவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள், இல்லாவிட்டால் பிறரைக் கேட்கவிடுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : கேள்வி கேட்பதற்கு முன்பே தலைவர் அவர்கள் குறுக்கிட்டு கேள்வியை நாசப்படுத்திவிட்டார்கள்.

இப்போது எதிர்க்கட்சி தலைவராக இருக்கிற கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது இந்த மனுநீதித் திட்டத்தைக் கொண்டு வந்தபோது மக்கள் தாலுகா ஆபீஸுக்கு சென்று மனுக்களைக் கொடுத்தார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார்.

திரு. சி. ஆறுமுகம் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை, உட்காருங்கள். மக்கள் சென்று தாலூக்கா ஆபீஸில் மனுக்கள் கொடுத்து வந்தபோதும் வேலை நடக்கவில்லை, இப்போது அதிகாரிகள் சென்று மனுக்கள் வாங்குகிறார்களே, அதுவும் சரியாக நடக்கவில்லை. எனவே மக்களுக்கும் செலவு, அரசாங்கத்திற்கும் செலவு என்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே புது வழி ஏதாவது கண்டுபிடிக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஆரம்பத்திலேயே கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்ட காரணத்தால் இதுபற்றி விளக்குகிற முறையில் விளக்கம் தரப்பட்டது. அவர்களும் புரிந்துகொண்டு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது நமது இன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற நமது கருணாநிதி அவர்கள் ஆவார்கள் என்பதை இரண்டாவதாகப் பேசும்போது திருத்திக் கொண்டார்கள். மகிழ்ச்சி. எதற்காக இந்தத்திட்டம் கொண்டுவரப்பட்டது என்பதுபற்றி சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கும் தெரிந்திருக்கும்.

[1977 ஆகஸ்ட் 6]

மக்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் நெருங்கிய உறவு முறையை ஏற்படுத்தும் பொருட்டு 1969-ம் ஆண்டிலிருந்து இந்த மாநிலத்தில் மனுநீதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமங்களிலுள்ள மக்கள் தங்களது கோரிக்கை மனுக்களுடன் அதிகாரிகளைத் தேடிச் செல்வதற்குப் பதிலாக அதிகாரிகளே கிராமங்களுக்குச் சென்று கிராம மக்களின் குறைகளை அவரவர் கிராமங்களில் வைத்தே கூடியவரை தீர்க்க இந்தத் திட்டம் வழி வகுக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், வருவாய்த் துறை அதிகாரிகள், விவசாய இலாக்கா அதிகாரிகள், பஞ்சாயத்து அதிகாரிகள் பொதுப்பணித் துறை அதிகாரிகள், நில அளவை அதிகாரிகள், ஆகியோர் ஒரு உதவி வட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் ஒரு மாதத்தில் 5, 6 தேதிகளில் ஒரு கிராமத்திற்குச் சென்று மனுக்களைப் பெற்று கூடியவரை கிராமத்தில் வைத்தே முடிவு செய்கின்றனர். கிராமத்திலேயே முடிவு செய்ய முடியாத காரியங்களில் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து விரைவில் முடிவு எடுக்கின்றனர்.

ஒவ்வொரு வட்டமும், உதவி வட்டமும் ஒரு மண்டல அதிகாரியின் கண்காணிப்பில் இருந்து வருகிறது. அந்த மண்டல அதிகாரி ஒவ்வொரு மாதமும் வட்டத்திலுள்ள கோப்புகளைப் பரிசிலனை செய்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்புகின்றனர்.

மாவட்ட ஆட்சியரும் மாதம் ஒரு முறை கோட்ட ஆட்சி அலுவலகங்களுக்குச் சென்று மக்களிடமிருந்து நேரிடையாக மனுக்களைப் பெறுகிறார். அந்தக் கோட்டத்திலுள்ள மனுக்களின் மீதான நடவடிக்கைகளையும் பரிசிலனை செய்கிறார். அதே போன்று கோட்ட ஆட்சியரும் குறிப்பிட்ட நாளில் வட்ட அலுவலகத்துக்குச் சென்று மக்களிடம் நேரிடையாக மனுக்களைப் பெறுகிறார்.

மனுநீதித் திட்டம் மக்களின் உண்மையான தேவைகளை அறியவும் பெரிதளவில் மக்களின் துயர் துடைக்கவும் உதவி செய்கிறது. மக்களுக்கு, குறிப்பாக கிராமங்களில் உள்ள மக்களுக்கு, அரசாங்கத்தால் அமுல் நடத்தப்படும் நல்ல பல திட்டங்களை விளக்கிக் கூற இந்தத் திட்டம் பயன்படுகிறது. மனுநீதித் திட்டத்தின்கீழ் 31-3-1977 முடிய 19,869 மனுக்கள் பெறப்பட்டன. அவற்றுள் 16,940 மனுக்களின் மீது முடிவு எடுக்கப்பட்டாகி விட்டது. முடிவு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

85 சதவிதம் ஆகும். இதற்குப் பிறகும் இன்னும் சிரிய முறையில் நடைபெற உறுப்பினர் அவர்கள் தங்களுடைய யோசனைகளைத் தெரிவிப்பார்களேயானால் அதைப்பற்றி அரசு பரிசிலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வினா நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது, அதற்கு விதியில் இடமில்லை என்று சொன்னார்கள். ஆனால் அன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் திரு. எட்மன்ட் அவர்கள் இதை எழுப்பியபோது எப்போது வேண்டுமானாலும் at any time என்றிருப்பதைச் சுட்டிக்காட்டி பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்று தாங்கள் முடிவு சொல்லியிருக்கிறீர்கள். . . . ஆனால் இப்போது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'Relating to the question, a point of order can be raised' என்றிருப்பதால் அதைப் பற்றி தான் சொன்னார்கள்.

புலவர் கா. கோவிந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மனுநீதித் திட்டம் முன்னாள் முதல்வர் கலைஞர் காலத்தில் உருவாயிற்று என்றாலும், பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது, அப்போதைய முதலமைச்சர் காமராஜ் அவர்களைத் தண்டலம் என்ற கிராமத்திற்கு அழைத்துச் சென்று அங்கு எல்லா அதிகாரிகளையும் வரவழைத்து, மக்களுடைய குறைகளை அங்கே கேட்டு அங்கேயே முடிந்தவரை தீர்த்து வைக்கின்ற முறையில் வழி வகுத்திருக்கிறார்கள். அந்த முறையில் மேலும் செம்மையாக நடத்த வழிவகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இந்த மனு நீதித் திட்டம், பேரறிஞர் அண்ணா அவர்கள் நல்லதொரு திட்டம் என்று ஏற்றுக்கொண்டு நடத்திய திட்டம் என்பதை ஒப்புக்கொண்டு கருத்து தெரிவித்த புலவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. துரை முருகன் எழுந்திருந்தார்.....)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலுள்ள எல்லா விஷயங்களைப் பற்றியும் தெளிவாக சொல்லியாய் விட்டதே. இனிமேல் இதில் உப கேள்விகள் வேண்டாம். அடுத்த கேள்வி—25.